# பொருளியல்

## க.பொ.த உயர்தரம்

# கருத்தரங்கு 2016

தொடர் - 01

# பொருளியல் அறிமுகம்

சிறு குறிப்புக்கள்

மாதிரி வினா விடைகள்

புள்ளித்திட்ட விளக்கம்

பல்தேர்வு வினாக்கள்


S.Jeyakumar

(B.A(Hons) ECOSPI, M.A.in Eco, P.G.D.E)

யா/வயாவிளான் மத்திய கல்லூரி

## பொருளியலில் ஆராயப்படும் அடிப்படை விடயங்கள்

1. வள அருமை
2. தெரிவு
3. பரிமாற்றம்

### வள அருமை

- வரையறையற்ற மனித விருப்பங்களை பூர்த்தி செய்வதற்கு வரையறுக்கப்பட்ட வளம் போதாமல் இருத்தல் வள அருமை எனப்படும்.

  மனித விருப்பம் > வளங்கள்

- வளங்களை எப்போதும் மனித விருப்பங்களுடன் ஒப்பிட்டு அருமை என்ற எண்ணக்கரு விளக்கப்படும்.

### அமையச்செலவு / சந்தர்ப்பச் செலவு

- மாற்றுத் தெரிவுகள் உள்ளபோது யாதாயினும் ஒரு தெரிவை மேற்கொள்வதற்காக அடுத்த மிகச்சிறிய தெரிவின் பெறுமதியை விட்டுக்கொடுத்தல் குறித்த தெரிவின் அமையச் செலவு எனப்படும்.
- அமையச்செலவு தெரிவுடன் தொடர்புடைய எண்ணக்கருவாகும்.
- அமையச்செலவு உள்ளுணர்வு

### தெரிவு

- அருமையான வளங்களை பல்வேறான மனித செயற்பாடுகளுக்கிடையில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதனை தெரிவு குறிக்கும்.
- எல்லாச் சமூகங்களும் தெரிவுப் பிரச்சினையை எதிர் நோக்குவதற்குரிய காரணங்கள்
  - ✓ வள அருமை
    - வரையறையற்ற மனித விருப்பங்கள்.
    - வரையறுக்கப்பட்ட வளங்கள்.
  - ✓ வள மாற்றுப் பயன்பாடு.

வள அருமை → மாற்றுப் பயன்பாடு

↓

தெரிவு

| என்ன பொருள் உற்பத்தி செய்தல் | எப்படி உற்பத்தி செய்தல் | யாருக்காக உற்பத்தி செய்தல் |
|---|---|---|

* பொருளியல் தீர்மானங்கள் எல்லை நலன் (MB), எல்லைச்செலவு (MC) என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படும்.

**அமையச்செலவு தோன்றும் சந்தர்ப்பங்கள்**

- வளங்கள் அருமையாக இருத்தல்.
- வளங்கள் மாற்றுப்பயன்பாட்டினைக் கொண்டிருத்தல்.
- உற்பத்தி செயற்திறன் இருத்தல்.
- பொருளாதார வளங்களை உற்பத்தியில் பயன்படுத்தல்.

**அமையச்செலவு பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பங்கள்**

- வளங்கள் அருமையற்றதாகக் காணப்படுதல்.
- வளங்கள் ஒரு பயன்பாட்டினை மட்டும் கொண்டிருத்தல்.
- உற்பத்தி செயற்திறன் இன்மை இருத்தல் (வேலையின்மை/ குறைந்த தொழில் மட்டம்).
- பொருளாதாரமல்லாத வளங்களை உற்பத்தியில் பயன்படுத்தல்.

**வளங்கள்**

- **பொருளாதார வளம்**
- **பொருளாதாரமல்லாத வளம்**

**பொருளாதார வளம்**

- நிரம்பல் வரையறுக்கப்பட்டிருத்தல்
- அருமையானதாக இருக்கும்
- உற்பத்தியில் பயன்படுத்தும்போது அமையச் செலவினைத் தோற்றுவிக்கும்.

உ+ம் : மூலதனம், உழைப்பு

**பொருளாதாரமல்லாத வளம்**

- நிரம்பல் வரையறை இன்றி இருத்தல்
- அருமையற்றதாகக் காணப்படும்
- அமையச் செலவினைத் தோற்றுவிக்க மாட்டாது.

உ+ம் : சூரிய வெளிச்சம், காற்று

**பொருளாதார வளங்கள்**

- **ஆதன வளம்/ பௌதீக வளம்**
  - நிலம் (இயற்கை வளம்)
  - மூலதனம்
- **மனித வளம்**
  - உழைப்பு
  - முயற்சி

## நிலம் (இயற்கை வளம்)

- உற்பத்திக்குப் பயன்படும் வகையில் இயற்கையின் கொடையாகக் கிடைக்கின்ற வளங்களை இயற்கை வளம் என்பர். (புவி மேற்பரப்பிலிருந்தும் உட்பகுதியிலிருந்தும் உற்பத்திக்குப் பயன்படும் வகையில் இயற்கையால் வழங்கப்பட்ட அனைத்தும் இயற்கை வளம் எனப்படும்)
- இயற்கை வளத்தினைப் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. மீள் உருவாகும் இயற்கை வளம்.
   பயன்படுத்தும்போது மீண்டும் மீண்டும் உருவாகக்கூடியவை
   Eg : காடுகள், கடல் வளம்

2. மீள் உருவாகாத இயற்கை வளம்.
   பயன்படுத்தும்போது படிப்படியாகக் குறைவடையக் கூடியவை.
   Eg : பெற்றோலியம் (கனிய நெய்), இரும்புத்தாது

## ஊழியம்/ உழைப்பு

- பொருள், சேவைகளின் உற்பத்திக்கு மனிதர்களால் உடல், உள ரீதியாக வழங்கப்படுகின்ற சேவை உழைப்பு எனப்படும்.

### பண்புகள்

- மனிதர்களுக்குச் சொந்தமான வளங்களாகும்.
- தேவைக்கேற்ப ஒழுங்குபடுத்திக் கொள்ளலாம்.
- அசைவுள்ளது.
- பேரம் பேசும் சக்தியைக் கொண்டிருக்கும்.
- தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சங்கங்களை உருவாக்கிக் கொள்ளும். (தொழிற்சங்கம்)
- ஊழியத்தின் உற்பத்தித்திறன் அதிகரித்து பின்னர் வீழ்ச்சியடையும்.

## மூலதனம்

- உற்பத்திக்குப் பயன்படும் வகையில் மனிதர்களால் உருவாக்கப்பட்ட சாதனங்கள் அனைத்தும் மூலதனம் எனப்படும்.
- நெடுவாழ்வுத் தன்மையைக் கொண்டிருப்பதுடன் தேய்வுக்குட்பட்டவை.
- இருப்பு மாறியாகக் காணப்படும்.

## முதலீடு

- புதிதாக மூலதனப் பொருட்களை உருவாக்கும் செயற்பாடு முதலீடு எனப்படும்
- இது மூலதனத் தேய்வை ஈடுசெய்வதற்காகவும், மூலதன இருப்பை அதிகரிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படும்.
- முதலீடு பாய்ச்சல் மாறியாகும்.

### மனித மூலதனம்

- தனி நபர்/வேலையாட்கள் கல்வி, பயிற்சி என்பவற்றினூடாக பெற்ற அறிவு(Knowledge), திறன்கள் (Skills) தனிப்பட மற்றும் சமூக ஆளுமைகள் ஒட்டுமொத்தம் மனித மூலதனமாகும்.
- இது உழைப்பு மற்றும் மூலதனம் ஆகிய இரண்டினதும் பண்புகளைக் கொண்டிருக்கும்.

### பணம் மூலதனமாகக் கருதப்படாமைக்குரிய காரணங்கள்

- பணத்தினை நேரடியாக உற்பத்திக்குப் பயன்படுத்த முடியாமை.
- பணம் நிதிச்சொத்தாகக் கருதப்படல்.

### முயற்சியாண்மை

இதன் தொழிற்பாடுகள் வருமாறு

1. ஒருங்கிணைத்தல் - நிலம், மூலதனம், உழைப்பு ஆகிய காரணிகள் ஒருங்கிணைந்து உற்பத்தி செயன்முறையை ஒழுங்கமைத்தல்.
2. உற்பத்தித் தீர்மானங்களை எடுத்தல்.
3. புத்தாக்கங்களை அறிமுகப்படுத்தல்.
4. இடரபாயத்தை ஏற்றல்.

$$\text{வளங்களின் விளைதிறன்} = \frac{\text{வெளியீடு}}{\text{உள்ளீடு}}$$

தீர்மானிக்கும் காரணிகள்

1. தொழினுட்பம்
2. தொழிற்பிரிவும் சிறப்புத் தேர்ச்சியும்
3. முகாமைத்துவம்
4. மனித மூலதனம்

| பொருளாதாரப்பண்டம் (சிக்கனப்பண்டம்) | பொருளாதாரமல்லாப் பண்டம் (இலவசப் பண்டம்) |
|---|---|
| மனித முயற்சியினால் உருவாக்கப்பட்டவை. | மனித முயற்சியின்றி இயற்கையின் கொடையாகக் கிடைப்பவை. |
| அருமைத் தன்மையானவை. | அருமையற்றவை. |
| உற்பத்திச் செலவு உண்டு. | உற்பத்திச் செலவு இல்லை. |
| விலை உண்டு. | விலை இல்லை. |
| அமையச் செலவினைக் கொண்டவை. | அமையச்செலவு பூச்சியமாகக் காணப்படும். |
| தனி நபர் உரிமையை கோரமுடியும்.<br>Eg: உணவுப்பண்டங்கள், ஆடைகள், வாகனங்கள். | தனி நபர் உரிமையை கோரமுடியாது.<br>Eg : சூரிய ஒளி, காற்று. |

| சிற்றினப் பொருளியல் (நுண்பாகப் பொருளியல்) | பேரினப் பொருளியல் (பருநிலைப் பொருளியல்) |
|---|---|
| பொருளாதார விடயங்களை தனித் தனியாக ஆராய்தல்.<br>Eg : 1. பால்மாவின் விலைமாற்றம்.<br>2. A என்ற கம்பனியின் மொத்த வருமானப் போக்கு. | பொருளாதார விடயங்களை முழுமையாகக் கருத்தில் எடுத்து ஆராய்தல்.<br>Eg : 1. நாட்டின் சராசரி விலைகள்.<br>2. வேலையின்மையின் வீழ்ச்சி. |

| நேர் கூற்று | நியமக் கூற்று |
|---|---|
| • அது என்ன? என்ன நடந்தது? என்ன நடக்கும்? எனும் வினாவுக்கு விடையாகவுள்ள கூற்றுக்கள். | • என்ன ஆகவேண்டும்/ என்ன நடக்கவேண்டும் என்ற விளைவுக்குரிய விடையாகவுள்ள கூற்றுக்கள். |
| • உண்மையாக/ பொய்யாக இருக்கலாம். | • அகவயத்தன்மையானவை |
| • விதிகள் கோட்பாடுகள் மூலமாக வெளிப்படுத்தப்படும். | • கொள்கைகள் மூலமாக வெளிப்படுத்தப்படும். |
| • பரிசோதனைக்கு உட்படுத்தக் கூடியவை.<br>Eg : 1. நுகர்வோனின் வருமானம் அதிகரிக்கும்போது பண்டமொன்றின் கேள்வி அதிகரிக்கும்.<br>2. 2014ம் ஆண்டு இலங்கையின் சந்தை விலை உள் நாட்டு உற்பத்தி 80 பில்லியன் டொலர்களாகும். | • பரிசோதனைக்கு உட்படுத்த முடியாதவை.<br>Eg : 1. சமமற்ற வருமானப்பகிர்வு நியாயமற்றதொன்றாகும்.<br>2. அரசிறையில் இலங்கை அரசின் கடன் வீதம் மிகவும் உயர்வாகக் காணப்படுவது விரும்பத்தக்கதன்று. |

கணக்கியல் இலாபம் = மொத்த வருமானம் - வெளிப்படையான செலவு (நேர் செலவு)

பொருளியல் இலாபம் = மொத்த வருமானம் - (வெளிப்படையான செலவு + உட்கிடையான செலவு)

தொடர்பு:- ~~வளப்~~ வள அருமையும், மாற்றுப்பயன்பாடும் இணைந்து தெரிவுப் பிரச்சனையை உருவாக்கின்றது.

Q1.

1. வள அருமை, மாற்றுப்பயன்பாடு மற்றும் தெரிவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பை விளக்குக?

வள அருமை:- தேவைக்கேற்ப மனித தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான மட்டுப்படுத்தப்பட்ட வளங்களின் கிடைப்பு இன்மை.

மாற்றுப்பயன்பாடு:- ஒரு வளத்தினை பல்வேறு உற்பத்தி பயன்பாட்டிற்கு பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் மாற்றுப்பயன்பாடு ஆகும்.

தெரிவு:- அருமையான வளங்களை பல்வேறான மனித தேவைகளுக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதை தெரிவு குறிக்கும்

(04 புள்ளி)

2. அமையச்செலவு என்றால் என்ன? அமையச்செலவு உற்பத்தியில் பூச்சியமாகும் சந்தர்ப்பங்களை தருக?

மாற்று தெரிவுகள் உள்ளபோது யாதேனும் ஒரு தெரிவு தெரிக்கப்படும் அடுத்தபடியான சிறந்த தெரிவின் பெறுமதி அமையச்செலவு எ-ம்.

சந்தர்ப்பம்:- அருமையற்ற வளப்பயன்பாடு
மாற்று பயன்பாடு அற்ற வளங்களின் பயன்பாடு
தொழில் ...
இலவச பண்டங்களின் பயன்பாடு

(04 புள்ளி)

3. பொருளாதாரப் பண்டங்களை பெற்றுக்கொள்ளும்போது விலை செலுத்தவேண்டும். இக்கூற்றினை ஏற்பீரா? உமது விடையை விளக்குக?

ஆம்

பொருளாதார பண்டங்கள் அருமையானதும் அமையச் செலவு கொண்டதுமானவை. மற்றும் அவற்றின் உற்பத்தியில் உற்பத்தி செலவு கொண்டு காணப்படும். ∴ பொருளாதார பண்டங்களுக்கு விலை செலுத்த வேண்டும்.

(04 புள்ளி)

4. பொருளாதார வளம் என்றால் என்ன? அதனை எவ்வாறு வகைப்படுத்துவீர்?

உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுகின்ற அருமைத்தன்மையையும் மாற்று பயன்பாட்டை உடையதுமான வளங்கள் பொருளாதார வளம் எ-ம் இவற்றின் ~~பயன்பாட்டில்~~ பயன்பாட்டில் அமையச் செலவு தோன்றும்.

இயற்கை வளம், மனித வளம்.

(04 புள்ளி)

5. மூலதனம் மற்றும் மனித மூலதனம் என்பவற்றை தெளிவாக வேறுபடுத்துக?

மூலதனம்:- உற்பத்தி செயற்பாட்டில் பயன்படும் மனிதனால் உருவாக்கப்பட்ட மெய்ச் சொத்துக்களின் இருப்பு மூலதனம் எ-ம்.


மனித மூலதனம்:- இருக்கும் ஒரு தொழில் செய்வதற்காக ஊழியர் கொண்டுள்ள தேர்ச்சி, திறன், அறிவு மனித மூலதனம் எ-ம்.

# உற்பத்தி சாத்திய வளையி


**எடுகோள்கள்**

- குறித்த காலம்
- பொருளாதார வளங்களின் அளவு நிலையானது.
- சாதனங்கள் அருமையானதாகவும், மாற்றுப் பயன்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- கிடைக்கின்ற சாதனங்களை உற்பத்தியில் பூரணமாகவும், உச்சச் செயற்றிறன் உடனும் பயன்படுத்த வேண்டும்.
- கையாளப்படும் தொழினுட்பம் நிலையானது.
- இருவகையான பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும்.


வள அருமை





உற்பத்தி வினைத்திறன்





வள ஒதுக்கீட்டு வினைத்திறன்





பொருளாதார பின்னடைவு




பொருளாதார மந்தம்




**சமமற்ற பொருளாதார வளர்ச்சி**





**பொருளாதார தடை**


1. உடனடி விளைவு





2. நீண்டகால விளைவு




**அமையச் செலவு**




**நிகழ்கால நுகர்வின் தியாகமும் பொருளாதார வளர்ச்சியும்**




**அதிகரிக்கும் சந்தர்ப்பக்கிரய விதி** / அதிகரிக்கும் அமையச் செலவு.

ஒரு பொருள் உற்பத்தியை சம அளவால் அதிகரிக்கும்போது மற்றைய பொருள் உற்பத்தியில் இழக்கப்படும் அளவு படிப்படியாக அதிகரித்துச் செல்வதனை அதிகரிக்கும் சந்தர்ப்பக்கிரய விதி என்பர்.


**காரணங்கள்**

- உற்பத்தி வளங்கள் ஓரினத் தன்மை அற்றவையாக இருத்தல்.
- உற்பத்தியில் கையாளப்படும் தொழில் முறைகள் வேறுபடுதல்.
- காரணிகளின் உற்பத்தித்திறன் பண்டங்களுக்கிடையில் வேறுபடுதல்.
- குறித்த ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய மிகவும் பொருத்தமான ஒரு காரணி மற்றைய பண்ட உற்பத்திக்கு பொருத்தமானதாக இல்லாமை.
-


**தொடக்கப் புள்ளிக்கு குழிவான உற்பத்தி சாத்திய வளையி**

- அதிகரித்துச் செல்லும் அமையச்செலவினால் உற்பத்திச் சாத்தியவளையி குழிவாக அமையும்.

| y பண்டம் (அலகுகள்) | 100 | 90 | 70 | 40 | 0 |
|---|---|---|---|---|---|
| x பண்டம் (அலகுகள்) | 0 | 10 | 20 | 30 | 40 |
| ஓர் அலகு x ற்கான அமையச் செலவு | – | $\frac{10}{10} = 1y$ | $\frac{20}{10} = 2y$ | $\frac{30}{10} = 3y$ | $\frac{40}{10} = 4y$ |




- வளங்கள் உற்பத்தியில் ஒன்றுக்கொன்று பூரண பதிலீட்டுத்தன்மையைக் கொண்டிருந்தால் மாறா அமையச்செலவு தோன்றும். அதனால் உற்பத்திச் சாத்திய வளையி நேர்கோடாகக் காணப்படும்.



## பொருளாதார வினைத்திறன்/ பொருளாதார செயற்திறன்

பொருளாதார வினைத்திறன்

| உற்பத்தி வினைத்திறன் | ஒதுக்கீட்டு வினைத்திறன் |
|---|---|


- மிகக் குறந்த செலவில் பண்டங்களை உற்பத்தி செய்தல். (தரப்பட்ட உள்ளீடுகளைப் பயன்படுத்தி உச்ச உற்பத்தியளவைப் பெறல்)

**நிபந்தனை**

1. நிறை தொழில்மட்டம் கிடைக்கின்ற வளங்களை உற்பத்தியில் பூரணமாகப் பயன்படுத்துதல்.

2. முழு உற்பத்தி

சகல வளங்களையும் அதிகூடிய செயற்றிறனுடன் பயன்படுத்துதல்.





- சமூகத்திற்கு அதிகமாகத் தேவைப்படும் பண்ட உற்பத்திகளுக்கு வளங்கள் அதிகளவில் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

**நிபந்தனை**

விலை = எல்லைச்செலவு

எல்லை நலன் = எல்லைச் செலவு




**தன் மீது விழும் ஒவ்வொரு அடியும் தன்னை சிற்பம் ஆக்குகிறது என்பது கல்லுக்கு தெரியாது**

Q2.

01. உற்பத்திச் சாத்திய வளையி என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(3 புள்ளிகள்)

02. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்திச் சாத்திய வளையில் வெளிப்படுத்துக?

a. சீரற்ற காலநிலையினால் விவசாய உற்பத்தி வீழ்ச்சியடைதல்.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(1 புள்ளி)

b. வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலில் ஏற்பட்ட அதிகரிப்பு.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(1 புள்ளி)

c. ஆடைத்தொழிலின் வளர்ச்சியை விட சுற்றுலாத்துறை வேகமாக வளர்ச்சியடைதல்.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(1 புள்ளி)

d. உற்பத்தி செயற்திறன் இன்மை வீழ்ச்சியடைதல்.

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(1 புள்ளி)

03. உற்பத்தி செயற்திறன், வள ஒதுக்கீட்டு செயற்திறன் ஆகியவற்றை உற்பத்திச் சாத்திய வளையி மூலம் விளக்குக?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(4 புள்ளி)

04. பொருளாதாரமொன்றின் வளங்களை நுகர்வுப்பொருள் உற்பத்தித் துறையிலிருந்து மூலதனப் பொருள் உற்பத்தித் துறையை நோக்கி மீள் ஒதுக்கீடு செய்வதன் விளைவுகளை பொருளியல் ரீதியில் பரிசீலனை செய்க?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(4 புள்ளி)

05. கூடிச்செல்லும் அமையச்செலவு விதியினை உற்பத்தி சாத்திய வளையி எவ்வாறு பிரதிபலிக்கின்றது?

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

..............................................................................................................

(4 புள்ளி)

## அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினையும் தீர்வுமுறையும்

### அடிப்படைப் பொருளதாரப் பிரச்சினைகள்

- என்ன பொருளை எந்தளவு உற்பத்திசெய்தல்
- எப்படி உற்பத்தி செய்தல்
- யாருக்காக உற்பத்தி செய்தல்

### மரபு ரீதியான பொருளாதாரம்

- பாரம்பரிய பழக்கவழக்கங்கள் மற்றும் சமய நம்பிக்கைகளைக் கொண்டிருக்கும்.
- சுய தேவையை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள். (வேளாண்மை, மீன்பிடித்தல், வேட்டையாடுதல்)
- பரிமாற்றம் பண்டமாற்று முறையில் அல்லது பணமுறையில் இடம்பெறும்.
- கடந்தகால பழக்கவழக்கங்களின் அடிப்படையில் தீர்வினைக் காணுதல்.

Eg : ஆதிவாசிகளின் பொருளாதாரக் கட்டமைப்பு.

### பொருளாதார முறைமைகளின் வகைகள்

- மரபு ரீதியான பொருளாதாரம்
- சந்தைப் பொருளாதாரம்
- கட்டளைப் பொருளாதாரம்
- கலப்புப் பொருளாதாரம்

### பொருளாதார முறைமைகள் வேறுபடுவதற்குரிய காரணிகள்

- வளங்களின் உடமையும் உரிமையும் வேறுபடுதல்.
- அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்குரிய தீர்வுமுறை வேறுபடுதல்.
- பொருளாதாரத்தின் தீர்மானம் எடுத்தலில் செல்வாக்குச் செலுத்தும் ஊக்குவிப்புக்களின் தன்மை.

வேறுபட்ட தகுதி விதிகளின் அடிப்படையில் பொருளாதார முறைமையின் பண்புகள்

| தகுதிவிதிகள் | மரபு ரீதியான பொருளாதாரம் | சந்தைப் பொருளாதாரம் | கட்டளைப் பொருளாதாரம் | கலப்புப் பொருளாதாரம் |
|---|---|---|---|---|
| சாதனங்களின் உரிமை | சமூகத்திலுள்ள நபர்களால் பொது உரிமையின் கீழ் காணப்படும். | தனியார் உரிமை | அரச உரிமை | தனியார் + அரச உரிமை |
| அடிப்படைப் பொருளாதா பிரச்சினைக்கு உரிய தீர்வு | சம்பிரதாய முறையின் கீழ் தீர்வு | விலைப்பொறி | மத்திய திட்டமிடல் குழு மூலம் | விலைப்பொறியும் மத்திய திட்டமிடல் குழுவும் |
| தீர்மானம் எடுத்தலில் செல்வாக்குச் செலுத்தும் ஊக்குவிப்புத் தன்மை | சம்பிரதாயங்களும் மரபுகளும் | சுய நன்மை மற்றும் இலாபம் | அதிகாரம் | சுய நன்மை + அதிகாரம் |

**சந்தைப் பொருளாதாரத்தில் விலையின் தொழிற்பாடுகள்**

- தகவல் வழங்கும் தொழிற்பாடு (சமிக்ஞை வழங்கும் தொழிற்பாடு) :

  சந்தையிலுள்ள நுகர்வோர் உற்பத்தியாளர்கள் தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு தேவையான தகவல்களை விலைகள் வழங்கும்.

- ஊக்குவிப்புத் தொழிற்பாடு (தூண்டற் தொழிற்பாடு) :

  விற்பனையாளர் மற்றும் கொள்வனவாளர் விலைச் சமிக்ஞைகளுக்கு வினைத்திறனுடன் உரிய துலங்கலை வழங்கத் தேவையான ஊக்குவிப்புக்களை வழங்கும்.

- பங்கீட்டுத் தொழிற்பாடு (வள ஒதுக்கீட்டுத் தொழிற்பாடு) :

  அருமையான பொருளாதார வளங்களை மாற்றுப் பயன்பாடுகளுக்காக ஒதுக்கீடு செய்யும் பணியைக் குறிக்கும்.

**தன்னம்பிக்கை இல்லாதவனுக்கு எந்தக் கடவுளையும் நம்பி பயன் இல்லை**

**சந்தைப் பொருளாதாரத்தின் அனுகூலங்களும் குறைபாடுகளும்**

| அனுகூலங்கள் | குறைபாடுகள் |
|---|---|
| உற்பத்தி வினைத்திறன் காணப்படும் | வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் அற்ற நிலை இருத்தல் |
| தொழில் சுதந்திரம், நுகர்வோர் இறைமை காணப்படுதல் | வெளிவாரி விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமை. |
| உற்பத்தியின் அளவிலும், தரத்திலும் அக்கறை செலுத்தும். | நிறைபோட்டியற்ற சந்தை முறைமையின் கீழ் (தனியுரிமை) நுகர்வோர் பாதிக்கப்படுதல். |
| தனியார் சொத்துரிமை இருப்பதனால் பொருளாதார அக்கறை கூடுதலாகக் காணப்படும். | பொருளாதார சமமின்மை காணப்படுதல். |
| ஒழுங்கமைப்பு மற்றும் தொடர்புபடுத்துதல் சிறப்பான்தாகக் காணப்படும். | பொருளாதார உறுதியின்மை. |
| போட்டிச் சூழல் இருப்பதனால் புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்து கொண்டிருக்கும். | பொதுவளங்கள் உச்சமாகப் பயன்படுத்தப்படல். |

**சந்தைப் பொருளாதாரத்தில் இலாபத்தின் பணிகள்**

- புதிய கண்டுபிடிப்புக்கான வெகுமதி
- வளங்களை ஒதுக்கீடு செய்ய உதவுதல்.
- ஆபத்துக்களை தாங்குவதற்கான கொடுப்பனவுகளை வழங்கும்.
- நிச்சயமற்ற தன்மைகளை அறிய உதவும்.
- உள்ளக நிதியீட்ட மூலமாக தொழிற்படல்
- அரச வருமானத்தை திரட்டும் ஒரு மூலாதாரமாக இருத்தல்.

**சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் தலையீடு**

- வள ஒதுக்கீட்டில் வினைத்திறனை ஏற்படுத்துதல்
  - பொதுப்பண்டங்களை வழங்குதல்
  - வெளிவாரி விளைவுகளை ஒழுங்கமைத்தல்
- பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்தல்.
- தனியுரிமையைக் கட்டுப்படுத்திப் போட்டியை உருவாக்குதல்.
- பொருளாதார உறுதியைப் பேணுதல்.
- பொதுவளங்களின் நுகர்வைக் கட்டுப்படுத்துதல்
- சந்தை முறைமையானது சிறப்பாகச் செயற்படுவதற்கான சட்ட ரீதியானதும், சமூக ரீதியானதுமான வரவெல்லைகளை நிர்ணயித்தல்.

* சந்தைப் பொருளாதாரமும் கட்டளைப் பொருளாதாரமும் **அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்குரிய தீர்வு** முறையில் வேறுபடும்.

- சந்தைப் பொருளாதாரம் - விலைப் பொறிமுறை
- கட்டளைப் பொருளாதாரம் - மத்திய திட்டமிடல் முறை

* முதலாளித்துவமும் சோசலிஸமும் **சாதனங்களின் உடமை (உரிமை)** அடிப்படையில் வேறுபடுத்தப்படுகின்றது.

- முதலாளித்துவம் - தனியார் சாதன உரிமை
- சோசலிஸம் - அரச சாதன உரிமை

**அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்குரிய தீர்வுமுறைகள்**

| பிரச்சினைகள் | சந்தைப் பொருளாதாரம் | கட்டளைப் பொருளாதாரம் |
|---|---|---|
| | • விலைப்பொறி மூலம் தீர்வுகாணும் (இலாப நோக்கில்) | • மத்திய திட்டமிடல் குழு மூலம் தீர்வுகாணும். (சமூக நலன் நோக்கில்) |
| என்ன பொருளை உற்பத்தி செய்தல் | • பொருள் காரணிச் சந்தையில் கிடைக்கும் விலை சமிக்ஞை மூலம் இலாபம் கூடிய உற்பத்திகளுக்கு அதிகளவில் வளம் ஒதுக்கப்படும். | • கட்டளை மூலம் சமூகத்திற்கு அதிக நன்மை தரும் உற்பத்திகளுக்கு வளங்கள் அதிகளவில் ஒதுக்கப்படும். |
| எப்படி உற்பத்தி செய்தல் | • செலவு குறைந்த, மிகவும் வினைத்திறன் உள்ள தொழினுட்ப முறையைத் தெரிவு செய்யும். | • சமூகத்திற்கு நன்மையைத்தரும் தொழினுட்ப முறையைத் தெரிவுசெய்யும். |
| யாருக்காக உற்பத்தி செய்தல் | • காரணிச் சந்தையில் நிலவும் விலைகள் மற்றும் தொகைகள் என்பவற்றின் அடிப்படையில் வருமானப் பங்கீடு இடம்பெறும். | • திட்டமிடல் அதிகாரிகள் கூலி மட்டங்கள் மற்றும் பண்டங்களின் விலைகள் தீர்மானிக்கப்படும். |

**பொறுமை அதிகம் உள்ளவனே எதையும் சாதிக்கும் ஆற்றல் உள்ளவனாக இருக்கின்றான்**

## மாறு நிலைப் பொருளாதாரம்

கட்டளைப் பொருளாதார முறையிலிருந்து சந்தைப் பொருளாதார முறைக்கு மாற்றமடைதலைக் குறிக்கும்.

**நாடுகள்**

1. ரஷ்யா 2. சீனா 3. அல்பேனியா 4. ருமேனியா

5. கங்கேரி 6. போலாந்து 7. ஜோர்ஜியா 8. ஸ்லோவாக்கியா

### பொருளாதார முறைமையொன்றின் செயலாக்கத்தினை மதிப்பீடு செய்வதில் பயன்படுத்தப்படும் தகுதி விதிகள்

- நிறைதொழில் மட்டம்
- பொருளாதார வினைத்திறன்
- பொருளாதார வளர்ச்சி
- பொருளாதார உறுதிப்பாடு
  - உள்ளக உறுதி நிலை
  - வெளியக உறுதி நிலை
- நியாயமான வருமானப் பங்கீடு
- பொருளாதார சுதந்திரம்
- சுற்றாடலின் தரம்

### இஸ்லாமியப் பொருளாதார அமைப்பு

**பண்புகள்**

- சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட தனியார் உடமையாகவும் பொது உடமையாகவும் காணப்படும்.
- பங்கீட்டில் பொருளாதார சமூக ரீதியான நீதித்தன்மை காணப்படும்
- ஹலால் (Halal) பண்டங்கள் உற்பத்தி, நுகர்வு செய்யப்படும்.
- ஹறாம் (Haram) பண்டங்களின் உற்பத்திக்கு இங்கு சாதனங்கள் பயன்படுத்தப்பட மாட்டாது.
  Eg : மதுபானம், போதைப்பொருட்கள்
- ஷகாத் (Zakah) அதிகாரங்களின் மூலம் செல்வமானது செல்வந்தர்களிடமிருந்து வறியவர்களுக்கு பங்கீடு செய்யப்படும்.
- அதிக வட்டி விரும்பத்தகாதது.

Q3.

01. பொருளாதார முறைமைகளை வகைப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படும் பிரதான தகுதிவிதிகள் எவை?

02. பொருளாதார முறைமையொன்றின் தொழிற்பாடுகள் யாவை?

.................................................................................................................................

.................................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(03 புள்ளி)

03. கட்டளைப் பொருளாதரமொன்று எவ்வாறு அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காணுகின்றது?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(04 புள்ளி)

04. சந்தைப் பொருளாதாரத்தில் வள ஒதுக்கீட்டில் செயற்திறன் காணப்படாமைக்குரிய காரணங்கள் யாவை?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(05 புள்ளி)

05. இஸ்லாமியப் பொருளாதாரத்தின் பிரதான பண்புகளைத் தருக?

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

..............................................................................................................................

(05 புள்ளி)

## M.C.Q

01. அனைத்து நாடுகளும் எதிர் நோக்கும் அடிப்படையான பொருளாதாரப் பிரச்சினை எது?

1. சூழல் மாசடைதல் பிரச்சினை அதிகரித்தல்.
2. பொது வளங்கள் மிகையான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படல்.
3. எல்லைக்குட்பட்ட வளங்களினால் எல்லையற்ற மனித விருப்பங்களை பூர்த்தி செய்ய முடியாமை.
4. எல்லைக்குட்பட்ட வளங்களைக் கொண்டு எல்லையற்ற மனித விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படுதல்.
5. வறியோர் சனத்தொகையின் சதவீதம் அதிகரித்துக் கொண்டு செல்லுதல்.

(………)

02. பொருளாதாரக் கூற்றுக்கள் சில பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

A. பொருளியலாளர்கள் பொருளாதார வளங்களை ஆதனவளம், மானிட வளம் என இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர்
B. சமமற்ற வளப்பகிர்வானது நியாயமற்ற ஒன்றாகும்
C. நுகர்வோனின் வருமானம் அதிகரிக்கும்போது ஆடம்பரப் பண்டங்களின் விற்பனை வீழ்ச்சியடையும்
D. இலங்கையின் அரசகடன் வீதம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 78.3 ஆக இருப்பது மிக உயர்வானதாகும்.
E. 2020 ஆம் ஆண்டு இலங்கையின் தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 7200 டொலர்களாகக் காணப்படும்.

நியமக் கூற்றுக்களைச் சரியாகக் காட்டும் விடை எது?

1. ABC 2. BCD 3. BDE 4. CDE 5. ADE

(....1....) 3

03. பின்வருவனவற்றுள் பேரினப் பொருளியல் விடயங்களை வெளிப்படுத்தும் சரியான விடை?

A. சராசரி விலைகளில் ஏற்படும் மாற்றம்.
B. கைத்தொழில் துறை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு.
C. இலங்கை ரெலிக்கொம்மின் மொத்த வருமானம்
D. எல்லை உற்பத்தியில் வீழ்ச்சி
E. பண நிரம்பலின் அதிகரிப்பும் வட்டிவீத வீழ்ச்சியும்

1. ABC 2. AC 3. ACD 4. BCD 5. AE

(....5....)

04. பொருளியல் கருத்தின்படி இலவசப் பொருள்களை விவரிக்கும் சிறந்த முறையாவது அப்பொருள்.

1. நுகர்வோருக்கு பூச்சிய விலையில் கிடைக்கும் என்பதாகும்
2. அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் என்பதாகும்
3. உற்பத்தியில் அருமையான வளங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்பதாகும்
4. நிலம் அல்லது கடலிலிருந்து நேரடியாகப் பெறப்படுகிறது என்பதாகும்
5. நிலையான அமையச் செலவில் உற்பத்தி செய்யப்பட்ட முடியும் என்பதாகும்.

(....1....) 3

05. பொருளாதாரப் பண்டம் என்பது யாது?

1. இலாபத்தில் விற்கப்படும் ஒரு பண்டம்.
2. குறைந்து செல்லும் எல்லைச் செலவில் உற்பத்தி செய்யப்படும் பண்டம்.
3. விலை செலுத்துவதன் மூலமே பெற்றுக்கொள்ளக் கூடியவை.
4. உற்பத்தியில் அமையச் செலவைக் கொண்டுள்ள பண்டம்.
5. தனியார் துறையினரால் நிரம்பல் செய்யப்படும் பண்டம்.

(……….)

06. பின்வருவனவற்றுள் பொருளாதாரப்பண்டம் ஒன்றின் பண்புகளைக் காட்டும் சரியான விடையை தெரிவு செய்க.

A. நுகர்வின்போது அமையச்செலவு இருத்தல்.
B. உற்பத்திச் செலவொன்று இருத்தல்.
C. அதிகரித்துச் செல்லும் எல்லைச் செலவொன்று காணப்படுதல்.
D. அதன் உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு இருத்தல்.
E. உற்பத்தியில் அமையச்செலவொன்று இருத்தல்.

1. A யும் B யும் 2. B யும் C யும் 3. A யும் E யும்
4. C யும் D யும் 5. B யும் E யும்

(……….)

07. நிலைத்து நிற்கும் வளத்திற்கு பின்வருவனவற்றுள் ஓர் உதாரணம்.

1. பெற்றோலியம் 2. காற்றலை சக்தி 3. இயற்கை வாயு
4. நிலக்கரி சுரங்கம் 5. தங்கப்படிமம்

(……….)

08. பின்வருவனவற்றுள் புதுப்பிக்க முடியாத வளத்திற்கு உதாரணமாகக் காணப்படுவது எது?

1. சமுத்திரத்திலுள்ள மீன்கள் 2. பிராண வாயு (oxygen)
3. இயற்கை எரிவாயு 4. வன விலங்குகள்
5. சூரிய சக்தி

(……….)

09. தனியார் பல்கலைக்கழகமொன்றில் கல்வி கற்பதன் அமையச் செலவாகக் கருதத்தக்கவற்றில் உள்ளடங்காதது பின்வருவனவற்றில் எது?

1. அவசியமான பாடநூல்களின் மீதானசெலவு.
2. கல்விக் கட்டணம் (tuition fees).
3. பல்கலைக்கழகப் பருவங்களின்போது வகுப்புகளுக்குச் செல்வதன் காரணமாக இழக்கப்படும் வருமானம்.
4. பல்கலைக்கழகப் பருவங்களின்போது மாணவர்கள் சிகை அலங்காரத்தின் பொருட்டு மேற்கொண்ட செலவுகள்.
5. குறிப்புகள் எடுப்பதற்கான தாள்கள் மற்றும் பென்சில்கள் என்பவற்றின் மீதான செலவுகள்.

10. நாடொன்றில் மனித வளத்தின் விளைதிறனை தீர்மானிக்கும் காரணி அல்லாதது?

1. கல்வியும் பயிற்சியும்
2. கையாளப்படும் தொழில்னுட்ப முறை
3. நடைமுறையிலுள்ள சம்பளமட்டம்
4. சுகாதாரமும் போசாக்கும்
5. தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்


(.........)

11. பொருட்கள் சேவைகளின் ஏதேனுமொரு சேர்க்கையை மிகக்குறைந்த செலவில் உற்பத்தி செய்வதை எவ்வாறு அழைப்பீர்?

1. பூரண உற்பத்தி
2. உற்பத்தி விளைதிறன்
3. குறைதொழில் மட்டம்
4. ஒதுக்கீட்டு வினைத்திறன்
5. உற்பத்தி வினைத்திறன்

(.........)


12. பொருளாதாரமொன்றின் உற்பத்தி இயல்தகவு எல்லை வரைபடத்திற் காட்டப்பட்டுள்ளது. உற்பத்தி இயல்தகவு எல்லையில் A புள்ளியிலிருந்து B புள்ளியை நோக்கி நகர்வதனால் கருதப்படுவது யாதெனில்.



1. பொருளாதாரத்தின் உற்பத்தி வினைத்திறன் மென்மேலும் அதிகரித்துச் செல்வதையாகும்.
2. பொருளாதாரத்தின் வளங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதையாகும்.
3. அளவுத்திட்டச் சிக்கனங்களால் பொருளாதாரத்திற்கு நன்மையான விளைவுகள் ஏற்படுவதையாகும்.
4. மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் அமையச் செலவு வீழ்ச்சியடைகின் றமையையாகும்.
5. மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் அமையச் செலவு அதிகரித்துச் செல்வதையாகும்.

(.........)


13. இங்குள்ள வரைபடமானது நாடொன்றின் உற்பத்தி இயல்தகவு வளையியைக் காட்டு கிறது. பின்வருவனவற்றில் எப்புள்ளிகளுக்கிடையிலான அசைவு அமையச் செலவினை ஏற்படுத்தாது?



1. Y இலிருந்து Z வரையாகும்.
2. V இலிருந்து W வரையாகும்.
3. W இலிருந்து X வரையாகும்.
4. X இலிருந்து W வரையாகும்.
5. U இலிரந்து V வரையாகும்.

14. ஒரு நாட்டின் உற்பத்தி சாத்திய வளையி பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

M புள்ளியிலிருந்து N புள்ளிக்கு பொருளாதாரம் நகருவதற்கு நீண்டகாலத்தில் மேற்கொள்ளவேண்டிய பொருத்தமான நடவடிக்கை எது?




1. நுகர்வுச் செலவினை அதிகரித்தல்.
2. ஏற்றுமதிக்கான கேள்வியை அதிகரித்தல்.
3. அரசாங்கம் ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரித்தல்.
4. முதலீடுகளை அதிகரித்தல்.
5. தொழிலற்ற இளைஞர் யுவதிகளுக்கு தொழில்வாய்ப்புகளை வழங்குதல். (………)

15. பொருளாதார வினைத்திறனின்போது பூர்த்தி செய்யவேண்டிய நிபந்தனைகள்

1. உற்பத்தி வினைத்திறனும் நிறை தொழில்மட்டமும்.
2. நிறை தொழில்மட்டமும் ஒதுக்கீட்டு வினைத்திறனும்
3. நிறைதொழில்மட்டமும் பூரண உற்பத்தியும்
4. உற்பத்தி வினைத்திறனும் ஒதுக்கீட்டு வினைத்திறனும்
5. உற்பத்தி வினைத்திறனும் விலை உறுதிப்பாடும். (………)

16. பின்வருவனவற்றில் எது முதலாளித்துவப் பொருளாதாரமொன்றின் மிகப் பிரதானமான பண்பாகக் கருதப்படுகின்றது?

1. நன்கு இயங்கும் மூலதனச் சந்தை
2. தனியார் சொத்துரிமையும் சொத்துரிமைகளின் பாதுகாப்பும்
3. நியாயமான வருமானப் பங்கீடும் வரிகள் குறைந்த மட்டத்தில் காணப்படுவதும்.
4. சகலருக்கும் சம வாய்ப்புகள் காணப்படல்
5. வளங்களின் செயற்திறனான ஒதுக்கீடு காணப்படல். (………)

17. கோட்பாடு ரீதியில் பின்வருவனவற்றில் எது திட்டமிட்ட பொருளாதாரமொன்றின் நன்மையாகக் கருதப்படும்?

1. தீர்மானங்கள் சமூக செலவுகள் மற்றும் சமூக நன்மைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படல்
2. உற்பத்தியானது குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியினைக் கொண்டிருத்தல்.
3. அரசாங்கம் எப்போதும் வரவு செலவுத் திட்டத்தைச் சமப்படுத்தல்.
4. உற்பத்தியின் அமைப்பு நுகர்வோரின் விருப்பத் தெரிவுகளை பிரதிபலித்தல்
5. ஊழியத்திற்கும் மூலதனத்திற்கும் இடையில் பூரண பதிலீட்டுத் தன்மை காணப்படல். (………)

18. மத்திய திட்டமிடற் பொருளாதார முறைமையின் ஒரு முக்கிய பண்பாக அமைவது.

1. வள ஒதுக்கீடு சார்பு விலைகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகும்.
2. பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாகவுள்ள தனியார் சொத்துரிமை காணப்படுவதாகும்
3. பொருளாதாரத்தில் பொருட்களையும் சேவைகளையும் எவ்வாறு சிறப்பாக உற்பத்தி செய்யலாம் என்பது பற்றிய தீர்மானங்கள் அரசாங்க கொள்கை வகுப்பாளர்களினால் மேற்கொள்ளப்படுவதாகும்.
4. சந்தைப் பொருளாதார முறையை விட அதிசிறந்த பொருளாதார வினைத்திறனை அடைவதாகும்.
5. வருமானம் மற்றும் செல்வம் என்பன மிகவும் சமமற்ற விதத்தில்பங்கீடு செய்யப்படுவதாகும்.

(....3....)

19. சந்தைப் பொருளாதாரமொன்றில் விலைகளின் பிரதான பணிகளில் ஒன்றாக அமைவது.

1. அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வதாகும்.
2. நிறுவனங்கள் இலாபம் உழைப்பதற்கான பொறிமுறையொன்றை வழங்குதலாகும்.
3. பொருளாதார உறுதிப்பாட்டை மேம்படுத்தலாகும்.
4. வருமானப் பங்கீட்டை மேம்படுத்தலாகும்.
5. கேள்வி வளையிகளின் நெகிழ்ச்சியைத் தீர்மானித்தலாகும்.

(....1....)

20. கலப்புப் பொருளாதார முறைமைகள் காணப்படுவதற்கான காரணங்களில் ஒன்று.

1. சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமானது தனியார் சொத்து உரிமைகளை உறுதி செய்யாமையாகும்.
2. இலாப நோக்கமானது எப்போதும் விரும்பத்தக்கதாக இல்லாமையாகும்.
3. நிறுவனங்களுக்கு இடையிலான போட்டித் தன்மையானது நுகர்வோன் நலன் உச்சப்படுத்தப்படுவதை உறுதிசெய்கிறமையாகும்.
4. சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமானது சந்தைத் தோல்விக்கு இட்டுச் செல்லலாம் என்பதாகும்.
5. சுதந்திரமான சந்தைப் பொருளாதாரமானது எப்போதும் வளங்களை வினைத் திறனுடன் ஒதுக்கீடு செய்கிறது என்பதாகும்.

(....4....)

21. கலப்புப் பொருளாதாரமொன்றில் சாதனங்களானவை.

1. நுகர்வோரதும் உற்பத்தியாளரதும் ~~உற்பத்தியாளரதும்~~ தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்படும்
2. நுகர் பொருட்களின் உற்பத்திக்கு ஒரு பகுதியும் மூலதனப் பொருட்களின் உற்பத்திக்கு இன்னொரு பகுதியும் ஒதுக்கீடு செய்யப்படும்
3. பகுதிளவில் சந்தைச் சக்தியினாலும் பகுதியளவில் அரசினாலும் ஒதுக்கீடு செய்யப்படும்
4. முற்றிலும் முயற்சியாளரின் செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.
5. முற்றிலும் நுகர்வோரது செலவீட்டுத் தீர்மானங்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.

(..........)

22. திட்டமிட்ட பொருளாதாரமொன்றில் யாருக்கு உற்பத்தி செய்வது? என்ற வினா பிரதானமாக

1. போட்டிச் சந்தைகளில் வருமானக் கொடுப்பனவுகளுக்காக சாதனங்களின் விற்பனையால்
2. சமூக வழக்காறுகளைக் கையாண்டு, சமூகத்தின் அங்கத்தவர்களுக்கு உற்பத்தியைப் பங்கீடு செய்வதனூடாக
3. குறைந்த வருமானம் உழைப்போருக்கு பொருட்களையும் சேவைகளையும் விலைகளையும் அரசாங்கம் தானே நிர்ணயிப்பதனூடாக
4. அரசாங்கம் பொருளாதாரத் திட்டமொன்றின் அங்கமாக வேதனங்களையும் விலை களையும் தானே நிர்ணயித்தலினூடாக
5. தொழில் கொள்வோருக்கும் தொழில் வழங்குனருக்குமிடையே பேரம் பேசலினூடாக நிர்ணயிக்கப்படும்.

(..........)

23. சந்தைப் பொருளாதாரத்தை மத்திய திட்டமிடல் பொருளாதாரமொன்றில் எது உயர்வாகக் காணப்படும்?

1. நுகர்வோர் இறைமை 2. விலை உறுதிப்பாடு 3. வருமான சமமின்மை
4. பொருளாதார வளர்ச்சி 5. புத்தாக்கம்

(..........)

24. பொருளாதார முறைமையொன்றில் காணக்கூடிய சில பண்புகள் பின்வருமாறு

A. சுதந்திரமான தொழில் முயற்சியாண்மை.
B. அரச சொத்துரிமை.
C. விலைப்பொறிமுறையில் சாதன ஒதுக்கீடு இடம்பெறல்.
D. அரசாங்கத்தின் பங்குபற்றலின் அளவு உயர்ந்த மட்டத்தில் இருத்தல்.
E. பொது நலனை அடிப்படையாகக் கொண்ட செயற்பாடுகள்.

சந்தைப் பொருளாதார அமைப்புக்குரித்தான பண்புகளைக் கொண்ட விடை எது?

1. A யும் D யும் 2. C யும் E யும் 3. B யும் C யும்
4. A யும் C யும் 5. A யும் E யும்

(...4....)

25. பொருளாதார முறைமையொன்றின் நிறைவுத்தன்மையை அளவீடு செய்வதற்கு பயன்படாத நியமம் எது?

1. பொருளாதார வினைத்திறன்
2. விலை உறுதிப்பாடு
3. பொருளாதார உட்கட்டமைப்பு விரிவாக்கம்
4. பொருளாதார சமத்துவம்
5. சூழல் தரம் பேணப்படுதல்.

(....5....) 3

**தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய இம் மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவையாகும்.**

# DCM யாழ்.நகர்

தாயகம் டிஜிற்றல்